# வறுமை ஒழிப்புத் திட்டம்

## (இனம் - 16)

01. வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலம் ஏழை மக்களின் வருமானத்தைப் பெருக்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வறுமை ஒழிப்புத் திட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இத்திட்டங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1) பயனாளிகளுக்கு உதவும் திட்டம் 2) சமுதாய சொத்துக்களை உருவாக்கும் திட்டம் என்பனவாகும். ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (JVVT), அதைச் சார்ந்த ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம் (DWCRA), ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் (TRYSEM), ஜவஹர் வேலை வாய்ப்பு முனைப்புத் திட்டம் (IJVVT), வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டம் (EAS), போன்ற திட்டங்கள் வறுமை ஒழிப்புத் திட்டங்களின் பெரும் பொருளுடைய திட்டங்களாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வருமானத்தைப் பெருக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மானியம் மற்றும் கடன் வழங்க வழி வகை செய்யும் நோக்கத்தைக் கொண்டதாகும். வேளாண் தொழிலாளர்களுக்கும் பயிற்சித் திறனற்ற தொழிலாளர்களுக்கும் வேலையில்லாத நாட்களில் வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்திற்காகவே ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

02. 1975 ஆம் ஆண்டு தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஓர் அமைப்பான மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் (DRDA), மாவட்ட அளவில் மேற்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சியாளர் இதன் தலைவராகவும் திட்ட அலுவலர் இதன் உறுப்பினர் செயலாளராகவும் செயற்படுவார். மாவட்ட அளவிலான அரசு அலுவலர்கள், பொது மக்களின் சார்பாளர்கள் கூட்டுறவு வங்கிகள் வணிக வங்கிகளைச் சார்ந்தவர்கள் மாவட்ட அரசு வளர்ச்சி முகமையின் ஆட்சி மன்றக் குழுவில் பெரும் எண்ணிக்கையில் அங்கம் வகித்து வருகின்றனர். ஒருங்கிணைந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் யாவும் மைய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்களாகும். வேலை வாய்ப்பு அமைச்சகம் விரிவான வழிகாட்டு நெறி முறைகளை வழங்குகின்றன. இத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மாநில மாவட்ட அளவில் மைய அரசு அளவில் முடிவு செய்யப்படுகின்றது. வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகும் ஏற்பாடுகளுக்கான செலவுகளைப் பகிர்வு செய்வதில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு ஆகும் செலவுகளில் 50 விழுக்காடு மைய அரசும், 50 விழுக்காடு மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன. அவ்வாறே ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டச் செலவில் 80 விழுக்காடு மைய அரசாலும், 20 விழுக்காடு மாநில அரசு ஏற்றுக் கொள்கின்றன. இத்திட்டங்களின் செயல்பாட்டில் குறிப்பிடத் தக்கது என்னவென்றால் மாவட்ட, வட்டார மற்றும் கிராம அளவில் இதுவரையில் அலுவலர்களைக் கொண்டே செயல்படுத்தப்பட்டு வருவதாகும். இத்திட்டத்தின் கீழ் உதவி பெறும் பயனாளர்களை தெரிவு செய்வதற்கு மட்டுமே மக்கள் பிரதிநிதிகளின் ஈடுபாடு உள்ளது.

03. தமிழ் நாட்டில் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் அதைச் சார்ந்த திட்டங்களுக்காக மொத்தம் ரூபாய் 1161 கோடி செலவிடப்பட்டுள்ளது. அநேகமாக ஒன்பது இலட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்துள்ளனர். வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான திட்டங்களுக்காக 208.55 கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சுமார் 400 இலட்ச மனித உழைப்பு நாட்கள் உருவாக்குவதற்கு திட்டமிடப் பெற்றது. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் வேலை வாய்ப்புத் திட்டங்களை மாவட்ட அளவில் சிறந்த முறையில் நிர்வகிக்கத் தேவையான ஒரு அமைப்பின் இன்றியமையாமை குறித்து உணர்ந்த போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் (DRDA), 1981–ம் ஆண்டில் உருவாக்கப்பட்டன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்புகள் தமிழ் நாட்டிலும் பிற மாநிலங்களிலும் 1971–ம் ஆண்டு முதல் செயல்படாத நிலையில் இருந்தபோது அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காகவும் வளர்ச்சித் திட்டப்பணிகளை சீரிய முறையில் நிறைவேற்றுவதற்காகவும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த ஊரக வளர்ச்சி முகமைகள் மைய அரசு, மாநில அரசு ஆகியவை அவ்வப்போது வழங்கும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு

ஏற்ப செயல்பட்டு வருகின்றன.

04. மக்களாட்சி நெறிமுறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சுய ஆட்சி அமைப்புகளில் ஒன்றான மாவட்ட ஊராட்சி மாவட்ட அளவில் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இதுவரை வளர்ச்சிப்பணிகளை தயாரித்து, நிறைவேற்றி வரும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிலைமைகளை ஆய்வு செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. 1994–ம் ஆண்டு ஊராட்சி சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளவாறு மாவட்ட ஊராட்சியும் மாவட்ட திட்டக்குழுவும் மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டங்களை தயாரித்தல், பார்வையிடுதல், கண்காணித்தல் போன்ற பணிகளில் மிக முக்கிய பங்கினை ஆற்ற வேண்டிய நிலையில் உள்ளன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையானது திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனம் என்று சொல்வதைவிட அது ஒரு ஒருங்கிணைப்பு நிறுவனம் என்றே கூறவேண்டும். இந்நிறுவனம் திட்டங்கள் செயல்படுத்துவதற்கான பணத்தைப் பெற்று ஊராட்சி ஒன்றியங்களிடம் பணிகளை செய்வதற்காக ஒப்படைத்து தொழில் நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குகிறது. அடிமட்டத்தில் கிராம சபையின் உதவிகளை நாடி ஏழைக் குடும்பங்களை தெரிவு செய்வதில் உதவி செய்கிறது. திட்டமிடுவதில் கிராமசபை, ஊராட்சி ஒன்றியங்கள், கூட்டுறவு சங்கங்களின் உதவிகளை மாவட்ட ஊராட்சி நாடுகிறது.

மாவட்ட ஊராட்சிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினை தனக்குள் எடுத்துக்கொள்ளும் போது அந்த முகமை செயல்படும் விதம்போல் செயல்பட வேண்டிய அவசியம் மாவட்ட ஊராட்சிகளுக்கு எழவில்லை. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சில பணிகளை எடுத்து செய்தாலும் மாவட்ட ஊராட்சிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை போன்று செயல்பட வேண்டியதில்லை. சுயேச்சையான நிறுவனங்கள் பணிகளை எடுத்து செய்வது போன்று மாவட்ட ஊராட்சிகளும் எடுத்து செய்யலாம். மத்திய அரசும் மாநில அரசும் பொறுப்பேற்கும் திட்டங்களுள் ஒன்றான வறுமை ஒழிப்புத் திட்டத்தில் 80 விழுக்காடு சிற்றூராட்சிகளுக்கும் 20 விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சரின் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளிலிருந்து இந்நிலை தெளிவாக விளங்கும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினைன மாவட்ட ஊராட்சியுடன் இணைப்பது என்ற முடிவு – மாவட்ட ஊராட்சியை ஒரு செயலாக்க நிறுவனமாக மாற்ற வேண்டிய அவசியமில்லை.

இருந்தாலும் வளர்ச்சிப் பணிகளை மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பில் ஏதாவது ஒன்றிற்கு அரசு வழங்குவதற்கு எதுவும் குறுக்கே நிற்காது. இந்திய அரசியலமைப்பு திருத்தத்தின் 243 (ஜி) பிரிவுக் கூறானது ஊராட்சிகளின் மீதான பொறுப்புரிமை மாற்றத்திற்கும் பொறுப்புகளுக்கும் உரிய நிலைகளில் அமைப்பது குறித்து தெவிக்கிறது. அதாவது

(அ) பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்காக திட்டப்பணிகளைத் தயாரித்தல் ;

(ஆ) இவை தொடர்பில் 11–வது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள இனங்கள் உட்பட பொருளாதார மேம்பாடு, சமூக நீதி ஆகிய திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவையாகும். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 257 ஆம் விதியிலும் இந்நிலை வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. வறுமை ஒழிப்புத்திட்டங்கள் 11வது அட்டவணையில் (16வது இனம்) சேர்க்கப்பட்டுள்ளன.

05. வரலாற்று முறைப்படி மாநில அளவிற்குக்கீழ் "மாவட்ட அளவில் நிர்வாகம்" என்பது எல்லாரும் ஏற்றுக்கொண்ட ஒன்றாகும். பரவலாக்கப்பட்ட ஆட்சி முறை அமைப்பிலுள்ள எந்த ஒரு திட்டத்திற்கும் மாவட்ட அளவிலுள்ள நிர்வாக அமைப்பிற்கு முக்கிய நிலை கொடுத்தாக வேண்டும். உள்ளூர் நிலைகளுக்கு ஏற்ப வளர்ச்சித் திட்டப்பணிகளை தயாரிப்பதும் அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது ஆகிய பணிகளில் முடிவெடுக்கும் அதிகாரம் மாவட்ட அளவில் மக்களாட்சி முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு மாவட்ட ஊராட்சியிடம் அளிக்க வேண்டும். இம்மாநிலத்தைப் பொறுத்தவரை மாவட்ட அளவில் வறுமை ஒழிப்புத் திட்டங்களை நிர்வகிப்பதற்காக நிர்வாக அமைப்பு மாவட்ட ஊராட்சி மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் உள்ளது. மூன்று படி நிலை ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை வழங்கவேண்டும் என்று கூறும் அரசியலமைப்புக் கட்டளையானது மாநில அரசு மாவட்ட ஊராட்சிகள் அதிக அதிகாரங்களுடன் சுயாட்சித் தன்மையோடு சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற நோக்கில் இயற்றப்பட்டதாகும்.

06. வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் தயார் செய்து, நிறைவேற்றும் பணிகளை மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழுவின் கண்ணோட்டத்தில் கருதப்படுகிறது. மாதிரி அளவையின்படி(NSS) (1987 – 88) தமிழ் நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருப்பவர்களின் எண்ணிக்கை 32.8 விழுக்காடாகும். 1.77 கோடி மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு இல்லா நிலைமையும் தமிழகத்தைப் பொறுத்தவரை சற்று அதிகமாகவே உள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத் தொடக்கத்தில் 11.87 விழுக்காடு அளவினர் வேலையில்லாமல் இருப்பதாக தேசிய மாதிரி அளவிடு அறிக்கை கூறுகிறது. வறுமையின் தன்மை, அளவு, வேலையில்லாததோரின் நிலை, வாய்ப்பு வள அமைப்பு, சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாறுபடுகின்றன. இத்தகைய மிக முக்கியமான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் உள்ளூர் தலைமைக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது மிகவும் இன்றியமையாததாகும்.

07. மக்களாட்சி பரவலாக்கும் அணுகுமுறைக்கு அலுவலர்களை அதிகமாகக் கொண்டுள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பொருந்துவதாகாது. மாவட்ட அளவில் வலுவிழந்த மக்களாட்சி அமைப்பு ஒரு புறமும், அதிகார வர்க்கத்துடன் கூடிய பலமான நிர்வாக அமைப்பான ஊரக வளர்ச்சி முகமை மறு பக்கமும் இயங்க முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகள் வந்த பிறகு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தேவையற்றதொரு அமைப்பாகும் என மாநிலத் திட்டக்குழு கருதுகிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தற்போதைய நிலையுடன் தொடர்ந்து நீடிப்பதானது மாவட்ட ஊராட்சியின் நிலையினைக் குறைப்பதோடு அதனை பின்னுக்கும் தள்ளி விடும். மேலே குறிப்பிட்டுள்ள இந்நிலையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையைக் கலைத்துவிட்டு அம்முகமை இதுவரை செய்து வந்த அதனுடைய அனைத்துப்பணிகளையும் மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது. மாவட்ட ஊராட்சியின் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்தில் இருப்பார். மாவட்ட அளவில் நிறைவேற்றப்பட்டு பெரிய அளவில் நடைபெற்று அனைத்து திட்டங்களையும் வறுமை ஒழிப்பு திட்டம் என்ற ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வரலாம். மலைப்பகுதி மேம்பாடு திட்டம் (HADP), வறட்சிக்கு இலக்காகும் திட்டம் (DPAP) போன்ற நிலவள மேம்பாடு திட்டங்களும் நடைமுறையில் உள்ளன. ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தை ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியப்பகுதிக்கான வளர்ச்சித் திட்டத்தை ஊராட்சி ஒன்றியமும் தயார் செய்வதற்கு ஊராட்சிகள் சட்டம் வழிவகை செய்துள்ளது. பல்வேறு துறைகளின் மூலம் நிறைவேற்றப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களுடன் வறுமை ஒழிப்பிற்கான திட்டங்களும் முறையாக இணைந்து நிறைவேற்றப்பட வேண்டுவது இன்றியமையாததாகும். மாவட்ட ஊராட்சி மற்றும் மாவட்ட திட்டக்குழு ஒருங்கிணைந்து செயல்படும்போது தான் மாவட்டத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கானத் திட்டங்களைத் தீட்டி செம்மையாக செயல்படுத்த முடியும்.

08. மாவட்ட ஊராட்சிகள் செய்ய வேண்டிய சட்டப்படியாகவும் கட்டுப்பாட்டுடனும் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் மாவட்ட ஊராட்சிக்குத் தேவையான செயலக ஆதரவு குறித்தும் அரசு ஏற்கனவே முடிவெடுத்து வெளியிட்டுள்ள அறிவுரைகளையும் இக்குழு கருத்தில் கொண்டுள்ளது. மாவட்ட ஊராட்சியின் முதன்மை செயலாக்க அலுவலராக மாவட்ட வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மாவட்ட ஆட்சியரகத்தில் வளர்ச்சிப் பிரிவுப் பணியாளர்களும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் பணியாற்றிய சில அலுவலர்களும் ஏற்கனவே மாவட்ட ஊராட்சியின் கீழ் பணியாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஊராட்சியின் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து 15–10–96 ஆம் நாளும், 226 நிலை எண்ணும் பெற்ற ஊரக வளர்ச்சித்துறை அரசாணையில் பட்டியலிட்டுக் குறிப்பிடப் பெற்றுள்ளன. இத்திட்டங்களின் நிறைவேற்றம் குறித்தும் ஆய்வு குறித்தும் ஊராட்சிகள் முடிவெடுக்க வேண்டியுள்ளன. அரசின் இவ்வாணைகள் சரியான பாதையில் எடுக்கப்பட்ட நல்ல முடிவுகளாகும். மாவட்ட ஊராட்சிகள் செயல் திறனுள்ள நல்லதொரு அமைப்பாக திகழச் செய்ய இவ்வாணைகள் நிறைவேற்றப்பட வேண்டும். பலதரப்பட்ட பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு ஏதுவாக மாவட்ட ஊராட்சிகளுக்குத் தேவையான தொழில் நுட்ப மற்றும் நிர்வாகத் திறன் பெற்றுள்ள வல்லுனர்களை நியமனம் செய்தல் வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கலைக்கப்பட்டால், அதிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மாவட்ட ஊராட்சிப்பணிகளுக்கு மாற்றப்பட வேண்டும். மேலே கூறப்பட்டுள்ள பின்னணியில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்க்கண்ட அதிகாரங்களையும், பணிகளையும் வழங்குவதற்கு மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது.

## I. ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. சுய வேலை வாய்ப்புத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம். ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம் பாட்டுத் திட்டம் ஆகிய இத்திட்டங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்துதல். | (1) பயனாளிகள் தேர்வில் உதவி உதவி செய்தல் – வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியலைத் தயார் செய்வதில் உதவி புரிதல். |
| | (2) பயனாளர் நலத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவி செய்தல். |
| | (3) ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டம் ஊரக இளைஞர்கள் சுய வேலை திட்டங்களில் பயனாளிகளுக்குத் தேவையான பணியிடங்கள், பணிப்பட்டறைகள் கட்டுவதில் உதவி புரிதல். |
| | (4) சிற்றூராட்சிகளிடம் உடைமையாக உள்ள நிலங்களையும், பொதுச் சொத்து வளங்களையும் உற்பத்தி நோக்கங்களுக்குப் பயன்படு வதற்காக பயனாளர்களுக்கு ஒதுக்கீடு செய்தல் / குத்தகைக்கு விடுதல். |
| | (5) வங்கிகளுக்குச் சேரவேண்டிய கடன் பாக்கிகளைத் திரட்டுவதில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவி புரிதல். |
| | (6) பயனாளிகள் நலனுக்கென செயற்படுத்தப்படும் திட்டங்களை செம்மையாக செயல்படு வத்துவதை கண்காணிப்பதில் மேற்பார்வையிடுவதில் உதவி செய்தல். |
| | (7) சொத்துக்கள் மானியத் தொகை மற்றும் கடன் ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்து ஊராட்சி ஒன்றியங் களுக்குத் தெரிவித்தல். |
| 2. கிராம கைவினைஞர்களுக்கு நவீன கருவிகள் வழங்கும் திட்டம் | கிராம கைவினைஞர்களுக்குத் தேவையான நவீனக் கருவிகள் (TOOLKIT) வழங்கும் திட்டத்தில் பயனாளர்களைத் தேர்வு செய்வதில் உதவி புரிதல். |
| 3. ஊதிய வேலை வாய்ப்புத் திட்டங்களான ஜவஹர் வேலைவாய்ப்புச் திட்டம், ஜ.வே.வா. முனைப்புத் திட்டம், வேலைக்கு உறுதி அளிக்கும் திட்டம் | (1) ஊதிய வேலை வாய்ப்புத் திட்ட பணிகளில் சேருவதற்கான பயனாளிகளைச் சிற்றூராட்சியில் தெரிவு செய்வதற்கு உதவி புரிவதோடு அவர்களுக்குத் தேவையான அடையாள அட்டை வழங்கல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | (2) மேற்படி திட்டங்களுக்கான செயற்திட்டங்களைத் தயார் செய்து ஊராட்சி ஒன்றியத்தின் தொழில் நுட்ப ஒப்புதலைப் பெறுதல். |
| | (3) பணிகள்/திட்டங்கள் நிறை வேற்றுவதற்கான பணிக் குழுக்களை அமைத்தல். |
| | (4) கிராமத்திலுள்ள தகுதி வாய்ந்த குடும்பங்கள் அனைத்திற்கும் வேலை கிடைப்பதற்கு உறுதி செய்தல். |
| | (5) பணிகள், சொத்துக்கள் உருவாக்குதல் மற்றும் மனித உழைப்பு நாட்களை உருவாக்குதல் போன்ற நிகழ்வுகளில் கண் காணிப்பு மற்றும் மேற் பார்வையிடுவதில் உதவி செய்தல். |
| 4. மில்லியன் கிணறுகள் திட்டம் (MWS) | (1) பயனாளிகள் தெரிவு செய்தல் |
| | (2) ஐ.வே.வா. திட்டம் மற்றும் ஐ.வே.வா. முனைப்புத்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் வேளாண்மைப் பணிகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் பயனாளிகள் திட்டத்திற்கு ஏற்பளித்து நிதி ஒதுக்கீடு செய்தல். |
| | (3) பயனாளியின் நிலத்திற்கு அப்பால் பாசனக்கிணறுகள் இருப்பின் அந்நிலத்தை மாற்றுதல் அல்லது குத்தகைக்கு எடுப்பதில் பயனாளி களுக்கு உதவி புரிதல். |
| | (4) ஐ.வே.வா. திட்டம், ஐ.வே.வா. முனைப்புத் திட்டம் வேளாண் உதவி திட்டம் ஆகிய திட்டங் களில் வேளாண் வளர்ச்சிக்கென உள்ள திட்டங்களில் பயனாளிகளுக்கு உதவி புரிதல் |
| | (5) திட்டப் பணிகளின் செயலாக்கத்தை கண்காணித்து மேற்பார்வையிடுவதுடன் ஊராட்சி ஒன்றியங் களுக்கு அறிக்கை அளித்தல். |
| 5. நில வளர்ச்சிக்கான திட்டங்கள் (வறட்சி இலக்காகும் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலைத்திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்) | (1) திட்டத்தயாரிப்பு பணிகளில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உதவி புரிதல். |
| | (2) இச்செயல் திட்டங்களின் கீழமைந்த பல்வேறு திட்டப் பணிகளுக்காகப் பயனாளிகள் தேர்வு செய்வதில் உதவி புரிதல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | (3) சிற்றூராட்சியின் உதவி தேவைப் படும் திட்டப்பணிகளில் அதனை செம்மையாகச் செய்து முடித்திடும் வகையில் உதவி செய்தல். |
| | (4) பணிகளின் தன்மை, தரம் பற்றி மேற்பார்வையிட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு முன்னேற்றம் குறித்துத் தெரிவித்தல். |
| 6. பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டம் (DDP) | மக்களுக்கு அவசிய, மிகவும் அத்தியாவசிய தேவையென கருதும் பணிகளைத் தேர்ந்தெடுத்து ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி களுக்குத் தெரிவித்து அத் திட்டங்களை பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டத்தில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்தல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. சுய வேலை வாய்ப்புத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக பெண்கள மற்றும் குழந்தைகள் மேம் பாட்டுத் திட்டம் ஆகிய இத்திட்டங்களை திட்டமிட்டுச் செயற்படுத்துதல். | (1) சிற்றூராட்சிகளின் மூலம் தகுதி வாய்ந்த பயினாளிகளைத் தெரிவு செய்தல். அத்துடன் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம், ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கான திட்டம் தயாரித்தல். |
| | (2) பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் மானியம் மற்றும் கடன் வழங்கு வதற்காக விண்ணப்பங்களை செயல் முறைப்படுத்துதல். |
| | (3) வங்கிகளிடமிருந்து கடன் வழங்கத் தேவையான ஏற்பாடுகள் செய்தல். |
| | (4) பயனாளிகளுக்கு நல்ல பயனைக் கொடுக்கும் திட்டங்களைத் தேர்வு செய்வதிலும் நடைமுறைப் படுத்து வதிலும் உதவி புரிதல். |
| | (5) ஊரக இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேருவதற்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தல் |
| | (6) பயிற்சி முடிந்த பிறகு அப்பயனாளிகளுக்கு சுயவேலை வாய்ப்புத் தொடங்க வேண்டிய உதவிகள் தொடர் நட வடிக்கைகள் மேற்கொள்ளுதல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | (7) ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேருவதற்குத் தேவை யான பெண்கள் குழுக்களை அமைத்து அவர்களுக்கு பயிற்சிகள் கொடுத்து திட்டங்களைத் தயார் செய்து நடைமுறைப் படுத்த உதவிகள் புரிதல். |
| | (8) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் பயனாளிகளுக்குத் தேவை யான தரம் வாய்ந்த சொத்துக் களை உருவாக்குதல், கருவிகள் வழங்கல். |
| | (9) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஊரக பெண்கள் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் பயனாளிகளால் தயாரிக்கப்பட்ட பொருட்களை நல்ல விலைக்கு விற்பதற்கு வேண்டிய உதவிகள்/ ஏற்பாடுகள் புரிதல். |
| | (10) பயனாளிகள் குறிப்பிட்ட பணி களுக்குத் தேவையான உள்ள மைப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல். |
| | (11) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் மற்றும் ஊரக பெண்கள் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் பயனாளிகளின் நலனுக்காக மற்ற திட்டங்களிலிருந்தும் பயன்பெறும் அளவில் திட்ட ஒருங்கிணைப்பு செய்தல். |
| | (12) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், மற்றும் ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டப் பணிகள் செம்மையாக செயல்பட கண் காணித்தல் மற்றும் மேற் பார்வையிடல். |
| | (13) மாவட்ட ஊராட்சிகளுக்கு இத் திட்டப் பணிகள் தொடர்பான காலாண்டு அறிக்கை அனுப்புதல். |
| | (14) பயனாளிகளுக்கான திட்டங்களை மதிப்பீடு செய்வதில் உதவி புரிதல். |
| 2. கிராம கைவினைஞர்களுக்கு நவீன கருவிகள் வழங்கும் திட்டம். | (1) இத்திட்ட உதவிக்காக தகுதி வாய்ந்த கைவினைஞர் பயனாளி களை தெரிவு செய்து அவர் களுக்குத் தேவையான நவீன கருவிகளை சிற்றூராட்சிகள் மூலம் வழங்குதல். |

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 3. | ஊதிய வேலை வாய்ப்புத்திட்டம் (ஜ.வே.வா.திட்டம் / ஜ.வே.வா.மு.திட்டம்/ வே.வா.உ.திட்டம்) | (1) ஊராட்சி ஒன்றிய நிதியத்துடன் தேவையான திட்டங்களைத் தயாரித்தல்.<br>(2) சிற்றூராட்சிகளால் ஆதரவு தரப்படும் திட்டங்களை ஆய்வு செய்து தொழில் நுட்ப இசைவு வழங்குதல்.<br>(3) செயல் திட்டங்களுக்கும், திட்டங் களுக்கும் தேவையான கருவி களைக் கொள்முதல் செய்து வழங்குதல்.<br>(4) செயல் திட்டங்களையும், திட்டங் களையும் நிறைவேற்றவதற்குச் சிற்றூராட்சி களுக்குத் தொழில் நுட்ப உதவிகள் அளித்தல்.<br>(5) வேலை வாய்ப்புப் பதிவேடுகளை பணிகளின் தரம், ஏற்படுத்தப்பட்ட சொத்துக்கள், ஊராட்சி ஒன்றியங் களாலும், ஊராட்சிகளாலும் உருவாக்கப்பட்ட வேலை நாட்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தல்.<br>(6) காலாண்டு அறிக்கைகளையும் பயனீட்டுச் சான்றிதழ்களையும் பெற்று அவற்றினை மாவட்ட ஊராட்சிகளுக்கு அளித்தல். |
| 4. | மில்லியன் கிணறுகள் திட்டம் (MWS) | (1) மில்லியன் கிணறுகள் திட்டம் மற்றும் சிறு பாசன திட்டத்திற்குத் தேவையான தகுதி வாய்ந்த பயனாளிகளுக்குச் சிற்றூராட்சி கள் மூலம் தெரிவு செய்தல். அத்துடன் பயனாளிகள் உதவி யுடன் கிணறுகள் தோண்டுதல்.<br>(2) செலவு தொகை வழங்கல். பணியினை மேற்பார்வையிடல் மற்றும் பணி முடிந்ததற்கான சான்றிதழ் வழங்குதல்.<br>(3) சிறு பாசன கிணறுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதற்கான திட்டங்களை தயாரித்தல், வங்கிகள் மூலம் நிதி உதவி பெறவும் கடன் வழங்கவும் ஆவன செய்தல். நீரிறைக்கும் விசைக் குழாய்களை அமைப்–பதற்குத் தேவையானவற்றைக் கொள்முதல் செய்து வழங்குதல்.<br>(4) மின் இணைப்பிற்காக தமிழ்நாடு மின் வாரியத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுதல். |

| | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| | | (5) திட்டப்பணிகள் குறித்து மேற் பார்வையிட்டு அதன் முன்னேற்றம் பற்றி மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை அனுப்புதல். |
| 5. | நிலவளர்ச்சிக்கான திட்டங்கள் (வறட்சிக்கு இலக்காகும் திட்டம் மே.தொ மே.தி மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்) | (1) இச்செயல் திட்டங்களின் கீழ் திட்டங்களை உருவாக்குவதற்கு மாவட்ட ஊராட்சியிடமிருந்து தொழில் நுட்பப்பணிக்கான ஏற்பினையும் நிதி ஒதுக்கீடு ஏற்பினை பெறுதல். |
| | | (2) சிற்றூராட்சிகளின் நெருங்கிய ஒத்துழைப்போடு திட்டங்களை செயற்படுத்துதல். |
| | | (3) அப்பகுதிக்கான திட்டங்கள் செயல்திட்டங்கள் ஆகியவற்றுடன் வறுமை ஒழிப்புத் திட்டங்களையும் ஒருங்கிணைத்தல். |
| | | (4) திட்டம் நடைபெறும் பகுதிகளில் சுற்றுப்பற சூழ்நிலை மற்றும் உயிரின வாழ்க்கை தொடர்பான புள்ளி விவரங்களை சேகரித்துக் பராமரித்தல். |
| | | (5) திட்டப்பணிகளின் தரம், தன்மை பற்றி மேற் பார்வையிடல். |
| | | (6) திட்டப்பணிகளை மேற்பார்வை யிட்டு மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை அனுப்புதல். |
| 6. | பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம் | பரவலாக்கப்பட்ட மாவட்டத்திட்டப் பணிளை ஊராட்சிகள் மூலம் செய்தல். |

## III. மாவட்ட ஊராட்சி

| | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள்<br>(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம் ஆகிய திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்தல். | 1. மாவட்ட அளவில் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக் ஒட்டுமொத்த திட்டமிடுதலும், யுக்தானுசாரமும்<br>2. சிற்றூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியம் அளவில் திட்டமிடுதலில் தொழில்நுட்ப உதவி வழங்கல்<br>3. இத்திடங்களின் கீழ்வரும் பணிகளின் தன்மையினை ஆராய்ந்து நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும் வங்கிகளுக்கு மானியம் வழங்கல் தொடர்பான பணிகளை கவனித்தல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| (ஆ) பத்து லட்சம் (மில்லியன்) கிணறுகள் திட்டம் (MWS) | |
| (இ) கிராம கைவினைஞர்களுக்கான நவீன கருவிகள் வழங்கும் திட்டம் | |
| (ஈ) ஊதிய வேலைவாய்ப்புத் திட்டங்கள் (ஐ.வே.வா.தி) ஐ.வே.மு.தி, வே.உ.தி). | |
| (உ) நிலவளர்ச்சிக்கான திட்டங்கள்(ITDP WGDP/ DPAP/ HADP) மற்றும் மாவட்ட பரவலாக்கல்பட்ட திட்டம் (DDP) | |
| (2) வறுமை ஒழிப்புத்திட்டங்களை கண்காணித்தல், ஆய்வு செய்தல் மற்றும் கணிப்பாய்வு செய்தல் | 1. வறுமை ஒழிப்புத்திட்டப் பணிகளை அவ்வப்போது கண்காணித்து, ஆய்வு செய்து கணிப்பாய்வு செய்தல்.<br>2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் விதி எண்.114 (2)ன் படி சிற்றூராட்சிகளின் கீழ் வராத மாவட்டத்தில் செயல்–படுத்தப் பட்டு வரும் அனைத்து துறைப்பணிகளையும் ஆய்வு செய்தல். |

**நிர்வாகச் சிக்கல்கள்**

09. அண்மையில் பஞ்சாயத்து சட்டம் (1994 ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம்) நிறைவேற்றப்பட்ட பிறகு சட்டப்படியான இரண்டு அமைப்புகள் அதாவது மாவட்ட ஊராட்சி மற்றும் மாவட்டத் திட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளன. இதில் மாவட்ட ஊராட்சி ஏற்கனவே அமைக்கப்பட்டு விட்டது. மாவட்டத்திட்டக்குழு அமைப்பதற்கான விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி கூடிய விரைவில் மாவட்ட திட்டக்குழு அமைக்கப்படும். இவ்விரு அமைப்புகளுடன் 1958 ம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மாவட்ட வளர்ச்சி மன்றமும் உள்ளது. 1975ம் ஆண்டு சங்கங்களின் பதிவுச்சட்டப்படி எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் ஏற்படுத்தப்பட்டன. எனவே மாவட்ட அளவில் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்க, நடைமுறைப்படுத்த, ஆய்வு செய்வதற்கு என மாவட்ட நிலையில் நான்கு அமைப்புகள் உள்ளன. இவற்றுள் சில நிறுவனங்கள் அமைப்பில் ஒற்றுமை உள்ளது. அவற்றின் பணிகளும் ஒன்றுக்கொன்று பிணைந்திருக்கின்றன. மாவட்ட ஊராட்சியின் பணிகளும் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் பணிகளும் ஒன்றுபோல் உள்ளன. எனவே ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஒரே விதமான பணிகளை செய்ய வேண்டிய நிலையிருப்பதனால் மாவட்ட வளர்ச்சிப்பாதையில் தடைக்கல்லாக அமையலாம். மாவட்ட ஊராட்சிகளே வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றுமுள்ள வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டு மாவட்டத்திலுள்ள மற்ற வளர்ச்சிப் பணிகளையும் கண்காணிக்க வேண்டும் என்று மாநிலத்திட்டக்குழு பரிந்துரை செய்துள்ளது. மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் பணிகளை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்வதால் மாவட்ட வளர்ச்சி மன்றம் என்ற ஒரு அமைப்பு தேவையில்லை. எனவே 1958ம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டத்தினை நீக்குவதன் வாயிலாக மாவட்ட வளர்ச்சி மன்றத்தினை கலைத்து விட மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தற்போது செய்து வரும் வறுமை ஒழிப்புத் திட்ட செயல்பாட்டினை மாவட்ட ஊராட்சிகள் செய்ய வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழு ஏற்கனவே பரிந்துரை செய்துள்ளதால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையை கலைத்துவிட்டு அதிலுள்ள பணியாளர்கள் சொத்துக்கள் மற்றும் கடன்களை (Assets and Liabilities) மாவட்ட ஊராட்சிக்கு மாறுதல் செய்ய மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது.

### நிதிச் சிக்கல்கள்

10. மாவட்ட வளர்ச்சி மன்றம் கலைக்கப்பட வேண்டும் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மாவட்ட ஊராட்சியுடன் இணைக்கப்படவேண்டும் என்று மாநிலத்திட்டக்குழு ஏற்கனவே பரிந்துரை செய்துள்ள நிலையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கான மைய மற்றும் மாநில அரசும் ஒதுக்கீடு செய்யும் நிதி அனைத்தும் மாவட்ட ஊராட்சி மூலம் பெறப்பட வேண்டும். கணக்குகள் பராமரிப்பு மற்றும் செலவுத்தணிக்கை தொடர்பாக அரசு விளக்கமான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட வேண்டும். மாநில சட்ட மன்றத்தின் முன் வைப்பதற்கு ஏதுவாக மாவட்ட ஊராட்சிகள் ஆண்டு அறிக்கையினை அரசுக்கு அனுப்ப வேண்டுமென்பதற்கு ஊராட்சிகள் சட்டத்தின் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆண்டுக்கணக்கு மற்றும் ஆண்டு அறிக்கை தயார் செய்து மாவட்ட ஊராட்சிகளின் கணக்குகளை முறையாக உள்ளாட்சி நிதித்தணிக்கை (Local Fund Audit) மூலம் தணிக்கை செய்வதற்கும் மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது.

11. பல்வேறு திட்டப்பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டினை மைய அரசு மாநில அரசு மூலம் அல்லாமல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு நேரடியாக அனுப்பி வருகிறது. சுயாட்சி கொள்கை அடிப்படையில் மாநில அரசு மூலமாகவே மைய அரசு நிதி ஒதுக்கீட்டினை செய்வது தான் முறையானதாகும். வறுமை ஒழிப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் தேவையான மைய மற்றும் மாநில அரசின் உதவியும், பங்கும் பணத்தினை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாவட்ட ஊராட்சிகள் மூலம் வழங்க வேண்டும்.

### சட்டச்சிக்கல்கள்

12. 1958ம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றம் சட்டத்தை நீக்குவதற்கும் தமிழ்நாடு பதிவுச்சங்கங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை கலைப்பதற்கும் மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிறது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் விதி எண் 241(1)ன் படி மாவட்ட திட்டக் குழுவினை கூடிய விரைவில் அமைக்கவும் பரிந்துரை செய்கிறது. மேலும் கிராமம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவில் மாவட்ட திட்டம் தயாரிக்கும் பணியில் உதவி செய்வதற்காக தகுதி வாய்ந்த தொழில் நுட்ப பிரிவு ஒன்றை அமைப்பதற்கும் பரிந்துரை செய்கிறது. சட்டமுறை விதிமுறைகள் படி ஊராட்சிகள் சிற்றூர்களுக்கான திட்டங்களை வகுத்து மேல்மட்ட அளவில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி திட்டங்களுடன் இணைக்கப்பட்டு மாவட்ட திட்ட குழுவிடம் சமர்பிக்கப்படவேண்டும். பரவலாக்கம் மற்றும் பரவலாக்கப்பட்ட திட்ட முறைகளைப் பின்பற்றுவதற்கு 241(1)ன் சட்டப்பிரிவு அமல்படுத்தப்படுவது மிகவும் முக்கியமானதாகும்.